சுருக்கம்

மதுரை மாநகராட்சி – விரிவாக்கம் – உள்ளாட்சி அமைப்புகளை இணைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை

**அரசாணை (நிலை) எண். 220** **நாள்:28.9.2010.**

C3 19973

**படிக்கப்பட்டன:**

(1) மதுரை மாநகராட்சி ஆணையாளர் கடிதம் எண் மதி1/19393/09 நாள் 9.9.2010.
(2) நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதம். ந.க.எண். 43631/2010/எம்.3, நாள் 21.9.2010.

---

**ஆணை :-**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட கடிதத்தில், மதுரை நகராட்சி 1.5.1971–ல் மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருவதாகவும், மதுரை மாநகராட்சியின் தற்போதைய பரப்பளவு 51.82 ச.கி.மீ., மக்கள் தொகை 2001–ஆம் கணக்கெடுப்பின்படி 9,28,869 எனவும், கடந்த 36 ஆண்டுகளாக மாநகராட்சியின் எல்லை விரிவுப்படுத்தப்படாமல் உள்ளதாகவும் மதுரை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

2. மேலும், நகர்மயமாக்கல் குறியீடுகள் அடிப்படையில் மதுரை மாநகராட்சியைச் சுற்றியுள்ள உள்ளாட்சி அமைப்புகள் ஆய்வு செய்யப்பட்டு, மதுரை மாநகராட்சியுடன், அவனியாபுரம், திருப்பரங்குன்றம், ஆனையூர் ஆகிய மூன்று நகராட்சிகள், ஹார்விபட்டி, திருநகர், விளாங்குடி ஆகிய மூன்று பேரூராட்சிகள், மேலமடை, உத்தங்குடி, வண்டியூர், கண்ணனேந்தல், நாகனாகுளம், திருப்பாலை, சின்ன அனுப்பானடி, சிந்தாமணி, ஐராவதநல்லூர், புதுக்குளம் பிட்–II மற்றும் தியாகராஜர்காலனி ஆகிய 11 ஊராட்சிகள் இணைக்கப்படலாம் என மாநகராட்சி மன்றம் தீர்மானித்துள்ளதாகவும், (தீர்மான எண்.964 நாள் 9.9.2010), மேலும், சம்பந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் கருத்து கோரப்பட்டதில், புதுக்குளம் பிட்–II மற்றும் தியாகராஜர்காலனி ஆகிய இரண்டு ஊராட்சிகளைத் தவிர மேற்குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் மாநகராட்சியுடன் இணைவதற்கு இசைவு தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளதாகவும் மதுரை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. புதுக்குளம் பிட்–II மற்றும் தியாகராஜர்காலனி ஆகிய இரண்டு ஊராட்சிகளும் மதுரை மாநகராட்சியுடன் இணைவதற்கு ஆட்சேபணை தெரிவித்திருந்தாலும், அவ்வூராட்சிகள், மிகக் குறைந்த பரப்பளவுடனும் (0.34+0.11=0.45 ச.கி.மீ), தற்போதைய மதுரை மாநகராட்சி மற்றும் மாநகராட்சியுடன் சேர்க்கப்படவுள்ள திருப்பரங்குன்றம் நகராட்சி ஆகியவற்றின் எல்லைகளுக்கு இடையில் அமைந்திருப்பதாலும், பொதுமக்களின் விருப்பம் மற்றும் பொது நலன் கருதியும், ஆட்சேபணையை நிராகரித்து அவ்விரு ஊராட்சிகளையும் மதுரை மாநகராட்சியுடன் சேர்ப்பதற்கு அரசு முடிவு செய்யலாம் என்றும் ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளை அமைந்துள்ள உத்தங்குடி ஊராட்சியை மாநகராட்சியுடன் சேர்க்கக் கோரி தொடரப்பட்ட நீதிப்பேராணை மனுவில் (எண்.26064/04), இக்கோரிக்கையை பரிசீலித்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

..2..

4. மேற்படி உள்ளாட்சிகளின் மக்கள் தொகை, தனிநபர் வருமானம், சதுர கிலோ மீட்டருக்கான மொத்த வருமான, பிரதான விவசாயிகளின் விழுக்காடு ஆகிய குறியீடுக்களின் அடிப்படையில் ஆய்வு செய்ததில் தற்போது இணைக்க உத்தேசிக்கப்பட்டுள்ள 17 உள்ளாட்சிப் பகுதிகளிலும் தனி நபர் வருமானம் மற்றும் மக்கள் தொகை அடர்த்தி கூடுதலாக இருப்பதாலும், பிரதான விவசாயத் தொழில் புரிவோரின் சதவீதம் குறைவாக இருப்பதாலும் இவ்வுள்ளாட்சி அமைப்புகளை மதுரை மாநகராட்சியுடன் இணைப்பது அவசியமாகின்றது என்றும் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

5. மதுரை மாநகராட்சி ஆணையர், இணைக்கப்படவுள்ள பகுதிகள் மிகவும் வளர்ச்சி அடைந்த மற்றும் நகரத்தன்மை வாய்ந்ததாக உள்ளதாலும், மாநகராட்சியின் உத்தேச விரிவாக்கம் நிர்வாகத்திற்கு ஏற்புடையதாகவும், மாநகராட்சி மையப்பகுதியிலிருந்து 7 கி.மீ தூரத்திற்குள் அனைத்துப் பகுதிகளும் அமைவதால், மாநகரில் செயல்படுத்தப்படும் சாலை, குடிநீர், பாதாள சாக்கடை, தெருவிளக்கு, திடக்கழிவு மேலாண்மை வசதிகள் போன்ற அனைத்து அடிப்படை கட்டமைப்பு வசதித் திட்டங்களையும் சிறந்த முறையில் ஒருங்கிணைத்து திட்டமிடவும், செயல்படுத்தவும் ஏதுவாக அவ்வுள்ளாட்சிகளை மதுரை மாநகராட்சியுடன் இணைப்பது அவசியமாகிறது என்றும் தெரிவித்துள்ளார். நகராட்சி நிர்வாக இயக்குநர், மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில் மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர், 17 உள்ளாட்சி அமைப்புகளையும் மதுரை மாநகராட்சியுடன் இணைக்க பரிந்துரை செய்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

6. நகராட்சி நிர்வாக இயக்குநர், மதுரை மாநகராட்சி மன்றத் தீர்மானம், மதுரை மாநகராட்சி ஆணையர், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோரின் பரிந்துரைகளின் அடிப்படையிலும், மேற்படி 17 உள்ளாட்சி அமைப்புகளின் நகர்மயமாக்கலுக்கான குறியீடுகளின் அடிப்படையிலும், அவ்வுள்ளாட்சிகளை மதுரை மாநகராட்சியுடன் இணைக்க அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

7. அரசு, இச்செயற்குறிப்பு தொடர்பான கவனமான பரிசீலனைக்குப் பின்னர், நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, கீழ்க்காணும் 17 உள்ளாட்சி அமைப்புகள் மதுரை மாநகராட்சியுடன் இணைக்கப்படலாம் என முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ.எண் | உள்ளாட்சி அமைப்பின் பெயர் | மக்கள் தொகை (2001) | பரப்பளவு (ச.கி.மீ.) |
|---|---|---|---|
| | **மதுரை மாநகராட்சி (தற்போதைய)** | 928869 | 51.82 |
| | **இணைக்கப்படவுள்ள உள்ளாட்சி அமைப்புகள்** | | |
| 1 | ஆனையூர் நகராட்சி | 38310 | 15.00 |
| 2 | அவனியாபுரம் நகராட்சி | 53006 | 16.00 |
| 3 | திருப்பரங்குன்றம் நகராட்சி | 39048 | 13.24 |
| 4 | ஹார்விபட்டி பேரூராட்சி | 8135 | 0.275 |
| 5 | திருநகர் பேரூராட்சி | 15547 | 5.03 |
| 6 | விளாங்குடி பேரூராட்சி | 21167 | 6.24 |
| 7 | மேலமடை ஊராட்சி | 29098 | 5.79 |
| 8 | உத்தங்குடி ஊராட்சி | 5519 | 8.45 |
| 9 | வண்டியூர் ஊராட்சி | 21977 | 8.02 |
| 10 | கண்ணனேந்தல் ஊராட்சி | 16013 | 3.71 |
| 11 | நாகனாகுளம் ஊராட்சி | 17803 | 2.85 |
| 12 | திருப்பாலை ஊராட்சி | 9453 | 3.09 |
| 13 | சின்ன அனுப்பானடி ஊராட்சி | 15676 | 4.02 |
| 14 | சிந்தாமணி ஊராட்சி | 3833 | 2.98 |
| 15 | ஐராவதநல்லூர் ஊராட்சி | 4966 | 1.03 |
| 16 | புதுக்குளம் பிட் II ஊராட்சி | 630 | 0.34 |
| 17 | தியாகராஜர் காலனி ஊராட்சி | 965 | 0.11 |
| | மொத்தம் | **1230015** | **147.99** |

8. இவ்வாணை வெளியிடப்படுவதால் உள்ளாட்சி அமைப்புப் பிரதிநிதிகளின் தற்போதைய பதவிக் காலம் பாதிக்கப்படாது. மேலும், 1971–ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 3–ன் வகைமுறைகளின்படி தேவையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். 1971–ம் ஆண்டு மதுரை மாநகராட்சி சட்டத்தின் பிரிவு 3 (4) ன் கீழ் வெளியிடப்பட வேண்டிய வரைவு அறிவிக்கையினை அரசுக்கு, உடன் அனுப்பி வைக்குமாறு நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். அச்சட்டத்தின் பிரிவு 3 (6) ன் கீழ் வெளியிடப்பட வேண்டிய அறிவிக்கையினைத் தொடர்ந்து, சிறப்பு அதிகாரி நியமிக்கப்பட்டு, விரிவுப்படுத்தப்படவுள்ள மதுரை மாநகராட்சிப் பகுதிகளுக்கான வார்டு எல்லைகளை நிர்ணயித்தல், மண்டலங்கள் அமைத்தல் குறித்த அறிக்கையை அனுப்ப வேண்டுமென நகராட்சி நிர்வாக இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார். இவ்வறிக்கையின் அடிப்படையில் வார்டுகள் நிர்ணயம் செய்யப்பட்டு, விரிவுப்படுத்தப்பட்ட மதுரை மாநகராட்சிக்கு 2011–ஆம் ஆண்டு சாதாரணத் தேர்தல் நடத்தப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
**அரசு முதன்மைச் செயலாளர்**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சேப்பாக்கம், சென்னை – 5.
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 108.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை.
ஆணையர், மதுரை மாநகராட்சி, மதுரை.
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள். (நகராட்சி நிர்வாக இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள். (பேரூராட்சிகளின் இயக்குநர் வழியாக)
தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள். (ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை இயக்குநர் வழியாக)

<u>நகல்:–</u>
மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் (மா.ந.2, ந.நி.5, பேரூ.2,அ.ந.2) துறை, சென்னை–9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

28.9.10

பிரிவு அலுவலர்